# இயக்கூர்தி விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயம், கோபிசெட்டிபாளையம்

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15-ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

MCOP.No. 372/2024

**ம.சா. 1**

**திரு.சீனிவாசன்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை ( 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில்)**

விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தில் நானும், என் மனைவியும், என் மகனும் பயணம் செய்தோம் என்றால் சரிதான். விபத்து நடந்த ரோடு வளைவான ரோடா என்றால் இல்லை. நான் வடக்கிலிருந்து தெற்காக சென்று திடீரென மேற்காக திரும்பியதால் தான் விபத்து நடந்தது என்றால் இல்லை நான் நேராகத் தான் சென்றுகொண்டிருந்தேன். விபத்து என்னுடைய கவனக்குறைவால்தான் நடந்தது என்றும், நாங்கள் 3 நபர்கள் இருசக்கர வாகனத்தில் பயணம் செய்ததால் என்னால் வாகனத்தை கட்டுபடுத்த இயலாமல் தடுமாறி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து ஏற்படுத்திய கூறும் இருசக்கர வாகனத்திலும் 3 நபர்கள் பயணம் செய்தார்களா என்றால் ஆமாம். விபத்து ஏற்படுத்திய மோகன்ராஜுக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.5 ஆவணத்தில் மேற்படி ஓட்டுநருக்கு உரிமம் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு தான் உள்ளது. விபத்து சமயத்தில் நான் தலைகவசம் அணியவில்லை என்றால் சரியல்ல.

விபத்தினால் எனக்கு நிரந்தர ஊனம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு பின்னிட்டு பிசியோதெரபி சிகிச்சை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. உண்மையிலேயே மேற்படி சிகிச்சை எடுத்திருந்தால் அதற்குண்டான ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றும் அவ்வாறு சிகிச்சை எடுக்கவில்லை என்பதால்தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது தொழில் மற்றும் வருமானத்தை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கங்கா மருத்துவமனையிலிருந்து சிகிச்சை முடித்து எனக்கு பூரண குணமடைந்துவிட்டது என்றும், தற்போது மனுவிற்காக பூரண குணமடையவில்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ ரசீதுகள் அனைத்தும் மனுவுக்காக மிகைப்படுத்தி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு அறுவை சிகிச்சை எதுவும் செய்யவில்லை என்றும், மருந்து மாத்திரைகள் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது எனவே எனக்கு எதிர்கால மருத்துவ செலவுகள் எதுவும் ஏற்படாது என்றால் சரியல்ல. எனக்கு ஊனச்சான்று வழங்கிய சமயத்தில் அறிவியல் ரீதியான சோதனைகள் செய்யப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு வழங்கியுள்ள ஊனச்சான்றிதழானது உரிய பரிசோதனை மேற்கொள்ளாமல் ஆவணங்களின் அடிப்படையில் மட்டுமே வழங்கப்பட்ட ஆவணம் எனவே அது ஏற்கத்தக்கதல்ல என்றால்சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீட்டு தொகை அதிகப்படியானது என்றால்சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு விதிகளை மீறியுள்ளதால் இந்த 2ம்

எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல, எனவே 2ம் எதிர்மனுதாரருக்கு எதிரான மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.